# சைதை துரைசாமியின்
# மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்

28, முதல் பிரதான சாலை, சி.ஐ.டி.நகர், சென்னை-600035.
போன்: 2435 8373, 98401 06162
**Email: manidhanaeyam@gmail.com Website: www.saidais.com**


## TNPSC குரூப்-II முதல்நிலைத் தேர்வில் 871 மாணவ–மாணவியர்கள் தேர்ச்சி பெற்றனர் !
## முதன்மைத்(MAIN)தேர்விற்கு 21.05.2016 முதல் விண்ணப்பிக்கலாம் !!

திரு.சைதை துரைசாமி, திருமதி மல்லிகா துரைசாமி, திரு.வெற்றி துரைசாமி மற்றும் திருமதி வசுந்தரா வெற்றி ஆகியோரால் சமுதாயம் மற்றும் பொருளாதார நிலையில் பின்தங்கிய மக்களுக்கு உதவும் பொருட்டு கடந்த 2005ஆம் ஆண்டு **“மனிதநேய அறக்கட்டளை”** தொடங்கப்பட்டு, மிகவும் சிறப்பாக செயல்பட்டு வருகிறது. சாதி, மத பாகுபாடுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் பயன்பெறும் வகையில், பல்வேறு சமுதாயப் பணிகள் இந்த அறக்கட்டளையின் மூலமாக செய்யப்பட்டு வருகின்றன.

**“மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகம்”** மூலம், தமிழகத்தைச் சேர்ந்த அனைத்துத் தரப்பு மாணவ-மாணவியர்களும் இந்திய அளவில் உயர் பதவிகளான ஐஏஎஸ், ஐபிஎஸ் போன்றவற்றிற்கு தேர்வு செய்யப்பட வேண்டுமென்கிற உயர்ந்த நோக்கோடு கடந்த பத்து ஆண்டுகளில் ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ், ஐஎ.ஃ.ப்எஸ், ஐஆர்எஸ், இந்தியவனத் துறை பணி ஆகிய பதவிகளுக்கும், தமிழ்நாடு அரசு தேர்வாணையம் நடத்தும் குரூப்-I, II (DC, DSP, DRO, DEO, CTO), சிவில் மற்றும் மாவட்ட நீதிபதி பதவிகளுக்கும், SUB-INSPECTOR OF POLICE, ASST.ENGINEER (HIGHWAYS, RURAL DEVELOPMENT & PANCHAYAT, PWD (CIVIL,ELECTRICAL & MECHANICAL) போன்ற பதவிகளுக்கும் இதுவரை **2768 க்கும் மேற்பட்ட மாணவ–மாணவியர்கள்** வெற்றி பெற்று மாநில மற்றும் தேசிய அளவிலும் பல்வேறு உயர் பதவிகளில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

**26.07.2015 அன்று தமிழ்நாடு அரசு தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட TNPSC Group-II முதல்நிலைத் தேர்வில் எமது மனிதநேயம் ஐ.ஏ.எஸ் கட்டணமில்லா கல்வியகத்தில் பயின்ற தாழ்த்தப்பட்டவர், சீர்மரபினர், சிறுபான்மைப்பிரிவினர், பிற்படுத்தப்பட்டவர், மிகவும் பிற்படுத்தப்பட்டவர், பொதுப்பிரிவினர் உட்பட 871 மாணவ மாணவியர்கள் தேர்ச்சி பெற்றுள்ளனர்.**

இந்த முதல்கட்ட தேர்வில், தேர்ச்சி பெற்றுள்ள அனைத்து மாணவ மாணவியர்களுக்கும் முதன்மைத் தேர்வு (MAIN) பயிற்சி வகுப்புகள் இலவசமாக தொடர்ந்து நடத்தப்படவுள்ளன. இப்பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் அனைத்து மாணவ-மாணவியர்கள், நாளை (21.05.2016) முதல் தங்களுடைய பாஸ்போர்ட் அளவு புகைப்படம், முதல்கட்ட தேர்விற்கான நுழைவுச்சீட்டு ஆகியவற்றுடன் நேரிலோ அல்லது www.saidais.com என்ற இணையதளம் மூலமாகவோ பதிவு செய்து கொள்ளலாம்.

இந்த முதன்மைத் தேர்வுக்கான பயிற்சி வகுப்பில் கலந்து கொள்ளும் தேர்ச்சி பெற்ற புதிய மாணவ மாணவியர்களுக்கு, தேர்வுகள், பாடப்புத்தகங்கள், பயிற்சி வகுப்புகள் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட உள்ளது என இம்மையத்தின் மாநில தேர்வுகள் ஒருங்கிணைப்பாளர் திரு.சாம் ராஜேஸ்வரன் அவர்கள் தெரிவித்துள்ளார்.